தி.மு.க. இளைஞர் அணி

இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

ஒன்றிய-நகர-பகுதி-பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

தஞ்சாவூர் வடக்கு, புதுக்கோட்டை வடக்கு & தெற்கு, நாகப்பட்டினம், மயிலாடுதுறை மற்றும் தஞ்சாவூர் தெற்கு & மத்திய மாவட்டங்களில் நியமிக்கப்பட்டுள்ள இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், மாவட்டச் செயலாளர், ஒன்றிய-நகர-பகுதி-பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற உள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல், இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

நாள்	நேரம்	கழக மாவட்டம்	இடம்
22.05.2025 வியாழக்கிழமை	காலை 10.00 மணி	தஞ்சாவூர் வடக்கு	ராயாஸ் கிராண்ட் ஹோட்டல், மகாமகம் குளம் எதிரில், கும்பகோணம்.
24.05.2025 சனிக்கிழமை	காலை 10.00 மணி	புதுக்கோட்டை வடக்கு & தெற்கு	கற்பக விநாயகா திருமண மண்டபம், மாலையீடு, புதுக்கோட்டை.
26.05.2025 திங்கள்கிழமை	காலை 10.00 மணி	நாகப்பட்டினம்	தளபதி அறிவாலயம், நாகப்பட்டினம்.
	மாலை 4.00 மணி	மயிலாடுதுறை	விஜய் மஹால், தரங்கம்பாடி சாலை, மயிலாடுதுறை
27.05.2025 செவ்வாய்க்கிழமை	காலை 10.00 மணி	தஞ்சாவூர் தெற்கு	ஏஏஏ பேலஸ், பேருந்து நிலையம் அருகில், பட்டுக்கோட்டை.
28.05.2025 புதன்கிழமை	காலை 10.00 மணி	தஞ்சாவூர் மத்திய	அறிஞர் அண்ணா மஹால், கீழவாசல், தஞ்சாவூர்.

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 19-05-2025

கலைஞர் 100 1924 - 2023

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி

மதுரை தெற்கு மாவட்டம்

அவனியாபுரம் கிழக்கு பகுதி பொறுப்பாளர் நியமனம்!

தலைமைக் கழக அறிவிப்பு!

மதுரை தெற்கு மாவட்டம், அவனியாபுரம் கிழக்கு பகுதிக் கழகச் செயலாளர் கே. மணிசேகரன் அவர்கள் மறைவெய்திய காரணத்தால், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற க.செந்தாமரைக் கண்ணன், (2/9, பால்காரத் தெரு, ஜராவதநல்லூர், 41வது வட்டம், மதுரை - 625009) அவர்கள் அவனியாபுரம் கிழக்குப் பகுதிக்கழகப்பொறுப்பாளராகநியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600 018
நாள்- 21.05.2025

துரைமுருகன்
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

ஒழுங்கு நடவடிக்கை ரத்து!

தலைமைக் கழக அறிவிப்பு!

தருமபுரி மேற்கு மாவட்டம், காரியமங்கலம் மத்திய ஒன்றியம் இல. கிருஷ்ணன் அவர்கள் தனது செயலுக்கு வருத்தம் தெரிவித்து மீண்டும் கழகப் பணியாற்றிட அனுமதி அளிக்குமாறு, கழகத் தலைவர் அவர்களிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று, அவர் மீதான ஒழுங்கு நடவடிக்கை ரத்து செய்யப்பட்டு, இன்று முதல் கழக உறுப்பினராகச் செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600 018
நாள்- 21.05.2025

துரைமுருகன்
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

மண்டலம் - 3,6, 7 பகுதிகளில் பராமரிப்புப் பணி

கழிவுநீர் உந்து நிலையங்கள் செயல்படாது!

சென்னை குடிநீர் வாரியம் தகவல்!

சென்னை.மே.22- மண்டலம் - 3 (மாதவரம்) ஜி.என்.டி ரோடு மற்றும் சந்திர பிரபு காலனி சந்திப்பில் 900 மில்லி மீட்டர் விட்டமுள்ள கழிவுநீர் உந்து குழாயில் ஏற்பட்ட உடைப்பை சரி செய்யும் பணிகள் மேற்கொள்வதால் 23.05.2025 அன்று இரவு 10.00 மணி முதல் 24.05.2025 இரவு 10.00 மணி வரை (24 மணி நேரம்) மண்டலம் - 3 (மாதவரம்). மண்டலம் - 6 (திரு.வி.க நகர்) மற்றும் மண்டலம்-7 (அம்பத்தூர்) - க்குட்பட்ட சில பகுதிகளில் கீழ்கண்ட கழிவுநீர் உந்து நிலையங்கள் தற்காலிகமாக செயல்படாது.

வ. எண் - மண்டலம் - பகுதிப் பொறியாளர் - கைபேசி எண்கள் கழிவுநீர் உந்து நிலையங்கள்

மண்டலம்-3 (மாதவரம்) 8144930903 கடப்பா சாலை உயர் மின் அழுத்த தொடர் கழிவுநீர் உந்து நிலையம், மதன குப்பம் உந்து நிலையம், ராஜீவ் காந்தி நகர் உந்து நிலையம், தாங்கல் கரை உந்து நிலையம், புத்தகரம் உந்து நிலையம், பத்மாவதி உந்து நிலையம், வீனஸ் நகர் உந்து நிலையம்.

மண்டலம் - 6 (திரு.வி.க நகர்) 8144930906 வில்லிவாக்கம் செக்டார் 'ஏ' உந்து நிலையம், கொளத்தூர் கழிவு நீர் உந்து நிலையம்.

மண்டலம்-7 (அம்பத்தூர்) 8144930907 கொரட்டூர் உயர் மின் அழுத்த தொடர் கழிவுநீர் உந்து நிலையம், லெனின் உயர் மின் அழுத்த தொடர் கழிவுநீர் உந்து நிலையம், சங்கம் உந்து நிலையம், அய்யப்பாக்கம் உந்து நிலையம், வி.ஒ.சி. நகர் உந்து நிலையம், நேரு நகர் உந்து நிலையம், தென்றல் நகர் உந்து நிலையம், கள்ளிக்குப்பம் உந்து நிலையம், கருப்பன் குளம் உந்து நிலையம், கருக்கு உந்து நிலையம், பள்ளம் உந்து நிலையம், சிட்கோ உந்து நிலையம், கச்சனகுப்பம் உந்து நிலையம், கிழக்கு அவென்யூ உந்து நிலையம், இளங்கோ நகர் உந்து நிலையம்.

எனவே, மாதவரம், திரு.வி.க நகர் மற்றும் அம்பத்தூர் மண்டலங்களுக்குட்பட்ட இடங்களில் கழிவுநீர் தொடர்பான புகார்களுக்கு கீழ்க் காணும் பகுதி அலுவலர்களை தொடர்பு கொள்ளவும்.

இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

கொண்டயம்பள்ளி க. இராமசாமி
மே 22 (1991)

இளமைக் காலத்திலேயே கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, சேலம் மாவட்டம் ஆத்தூர் வட்டச் செயலாளராக கழகப் பணியாற்ற தொடங்கி, தலைவாசல் ஒன்றியச் செயலாளர், பொதுக்குழு உறுப்பினர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

ஆத்தூர் வட்ட கூட்டுறவு ஒன்றிய தலைவராகவும் – வீரகனூர் வீடுகட்டும் சங்கத் தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.

1964ல் நடைபெற்ற இந்தி சட்டஎரிப்பு போராட்டத்தில் கலந்து கொண்டு சிறைவாசம் அனுபவித்ததுடன், மிசா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு ஒரு ஆண்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

ராஜிவ்காந்தி படுகொலை செய்யப்பட்டபோது ஏற்பட்ட கலவரத்தில் எதிர்க் கட்சியினரால் தாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

திருவள்ளூர் மத்திய மாவட்டம் சுற்றுச்சூழல் அணி மாவட்ட அமைப்பாளர் பசுமை இ.ஜாக்கப் மகள் ஜே.எஸ்.ஹேஷினி அர்ஜுனா வில்வித்தை அகாடமி சார்பில் 6 நிமிடங்களில் 60 வில்லு அம்புகள் எய்யப்பட்டு உலக இளம் சாதனையாளர்கள் புத்தகத்தில் இடம்பெற்று சாதனை படைத்துள்ளார். இந்நிலையில் தமிழ்நாடு சிறுபான்மையினர் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசரைச் சந்தித்து சாதனை புத்தகத்தில் இடம் பெற்றதற்கான சான்றிதழை காண்பித்து வாழ்த்து பெற்றனர். உடன் திருவேற்காடு நகரக் கழகச் செயலாளர் என்.இ.கே.மூர்த்தி உள்பட குடும்பத்தினர்கள் உள்ளனர்.

2711 தொழிலாளர்களுக்கு ரூ.1.18 கோடியில் நல உதவிகள்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆட்சியில் கட்டுமானத் தொழிலாளர்களுக்கு சாதனைகள்!

அமைச்சர் இரா.இராஜேந்திரன் பேச்சு!

சேலம், மே 22- சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் மற்றும் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரிய தலைவர் பொன்குமார் ஆகியோர் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறையின் சார்பில் 2,711 தொழிலாளர்களுக்கு ரூ.1.18 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்.

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம் மற்றும் அமைப்பு சாரா தொழிலாளர்கள் நல வாரியங்கள் மூலம் அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தலைமையில், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரிய தலைவர் பொன்குமார் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, ஆகியோர் முன்னிலையில் சேலம் காந்தி ரோட்டில் நேற்று (21.5.2025) நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் பேசியதாவது.

முன்னாள் முதல்வர் டாக்டர் கலைஞர் தொழிலாளர்களின் நலனை கருத்தில்கொண்டு முதன்முதலில் அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியத்தை உருவாக்கினார்கள். முன்னாள் முதல்வர் கலைஞர் அவர்களால் 1996 முதல் 2001 வரை 10 நல வாரியங்களும், 2006 முதல் 2011 வரை 6 நலவாரியங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

முதலமைச்சர் நாட்டிலேயே தமிழ்நாடு முதன்மை மாநிலமாக திகழும் வகையில் பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அந்தவகையில் தமிழ்நாடு முதலமைச்சர் தற்போது Zomoto, Swiggy, Uber Eats உள்ளிட்ட தொழிலாளர்களுக்காக நல வாரியம் ஏற்படுத்தியுள்ளார். நல வாரியத்தில் பதிவுபெற்ற தொழிலாளர்களுக்கு கல்வி, திருமணம், மகப்பேறு. இயற்கை மரணம், ஈமச்சடங்கு. விபத்து மரணம், விபத்து ஊனம், ஓய்வூதியம், குடும்ப ஓய்வூதியம் உள்ளிட்ட பலன்களும், பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி திட்டம் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

பதிவு பெற்ற பெண் ஆட்டோ ஓட்டுநர்களுக்கு சொந்தமாக ஆட்டோ வாகனம் வாங்குவதற்கு 1 இலட்சம் மானியம், தொழிலாளர்கள் பணியிடத்தில் விபத்து மரணம் ஏற்பட்டால் இழப்பீட்டு தொகையை ரூ.5 இலட்சத்திலிருந்து தற்போது ரூ.8 இலட்சமாக முதலமைச்சர் உயர்த்தி வழங்கியுள்ளார். கட்டுமான தொழிலாளர்கள் பணி தொடர்பாக கூடும் இடங்களில் ரூ.20 கோடியில் அடிப்படை வசதி மையங்கள், சென்னையில் 2 முதியோர் இல்லங்கள், பட்டய படிப்பிற்கு கூடுதலாக ரூ.1,000 கல்வி உதவிதொகை, முனைவர் படிப்பிற்கு ஆண்டிற்கு ரூ.15 ஆயிரம் ரூபாய் வீதம் 3 ஆண்டுகளுக்கு கல்வி உதவித் தொகை, ரூ.45 கோடியில் கட்டுமான தொழிலாளர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி, கலைஞர் கைவினைத் திட்டம் போன்ற நலத்திட்டங்களை முதலமைச்சர் தற்போது அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள்.

இன்றையதினம் நடைபெறும் இந்நிகழ்ச்சியின் வாயிலாக பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி திட்டத்தின் கீழ், தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் கட்டப்பட்டுள்ள குடியிருப்புகளில் 8 பயனாளிகளுக்கு வீடு ஒதுக்கீடு செய்வதற்கான நிதியுதவி, திருமணம், கல்வி, இயற்கை மரணம், விபத்து மரண உதவித்தொகை என 2,711 தொழிலாளர்களுக்கு ரூ.1.18 கோடி நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

முதலமைச்சர் சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் வகையில் பல்வேறு திட்டங்களை அறிவித்து நிறைவேற்றி கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் சுற்றுலாத்துறைக்கென தனி சுற்றுலாக்கொள்கையினை கடந்த 2023 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதன்படி தமிழ்நாட்டில் உள்ள 300 சுற்றுலாத்தளங்களை சர்வதேச தரத்தில் உயர்த்திட வேண்டுமென அறிவுறுத்தியுள்ளார்கள். அதோடு மட்டுமல்லாமல் அதிக நிதி ஒதுக்கீடு செய்து சுற்றுலாத்துறைக்கான நிறைய அறிவிப்புகள் வெளியிடப்பட்டுள்ளது. குறிப்பாக பேக்கேஜ் சுற்றுலா திட்டம் பொதுமக்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது.

இந்தியாவில் உள்ள பல்வேறு மாநிலங்கள் மட்டுமில்லாமல் கனடா மற்றும் இங்கிலாந்து போன்ற நாட்டு தலைவர்கள் தமிழ்நாடு முதலமைச்சர் அறிவிக்கும் திட்டங்களை பின்பற்றுகின்றனர். தொழிலாளர்கள், விவசாயிகள், மாணவர்கள் மற்றும் மகளிர்களுக்கான ஆட்சியை தமிழ்நாடு முதலமைச்சர் செயல்படுத்தி வருகிறார்கள். இவ்வாறு சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் பேசினார்கள்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரிய தலைவர் பொன்குமார் பேசியதாவது.

முதலமைச்சர் அவர்களின் சாதனைகளை இந்தியாவில் உள்ள மாநிலங்கள் மட்டுமல்லாமல் பிற நாடுகளும் பின்பற்றும் வகையில் உள்ளது. அதன டிப்படையில் ஒவ்வொரு துறையிலும் புதுமையை புகுத்தியுள்ளார்கள். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆட்சிகாலத்தில் 2006 முதல் 2011 ஆம் ஆண்டு வரை தொழிலாளர்களின் நலனுக்காக பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. தற்பொழுது தமிழ்நாடு முதலமைச்சர் ஆட்சி பொறுப்பேற்ற பின்னர் கட்டுமானத்தொழிலாளர்களுக்கான விபத்து உதவித்தொகை 2 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. பணிவிபத்து உதவித்தொகை 8 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. பேறுகால உதவி ரூ.18,000 ஆகவும், திருமண உதவித்தொகை ரூ.20,000 ஆகவும், 6 ஆம் வகுப்பு முதல் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு கல்வி உதவித் தொகை இரட்டிப்பாக்கி வழங்கப்பட்டு வருகிறது. அதேபோன்று மருத்துவ செலவிற்காக மாதம் ரூ.1,000 வழங்கப்படுகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் ஆட்சி பொறுப்பேற்றது முதல் இதுவரை 3,700 கட்டுமான தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. கட்டுமான தொழிலாளர்களின் குழந்தைகள் பயன் பெறும் வகையில் 7 மாவட்டங்களில் புதிதாக தொழிற்பயிற்சி நிலையங்கள் தொடங்குவதற்கான அனுமதியினை தமிழ்நாடு முதலமைச்சர் வழங்கியுள்ளார்கள்.

இந்தியாவிலேயே முதன்முதலில் தமிழ்நாட்டில்தான் அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியம் உருவாக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். அந்தவகையில் அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியத்தின் மூலம் பெண் ஆட்டோ ஓட்டுநர்களுக்கு சொந்தமாக ஆட்டோ வாகனம் வாங்குவதற்கு ரூ.1 இலட்சம் மானியம் என இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் மட்டும் பெண்களுக்கான அதிக திட்டங்களை உருவாக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை, கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கான முதலமைச்சரின் புதுமைப்பெண் மற்றும் தமிழ் புதல்வன் திட்டத்தினை செயல்படுத்தி உள்ளார்கள்.

இத்தொழிலாளர் நல வாரியத்தில் கடந்த 4 ஆண்டுகளில் மட்டும் 20 இலட்சம் தொழிலாளர்கள் பதிவு செய்துள்ளனர். இதில் 15 இலட்சம் தொழிலாளர்களுக்கு ரூ.1,500 கோடி மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான இந்த ஆட்சி அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு பொற்கால ஆட்சியாக செயல்பட்டு வருகிறது. இவ்வாறு தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரிய தலைவர் பொன்குமார் பேசினார்கள்.

இந்நிகழ்ச்சியில் மேட்டூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.சதாசிவம், தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு செயலாளர் அ.திவ்யநாதன், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரிய செயலாளர் க.ஜெயபாலன், சேலம் வருவாய் கோட்டாட்சியர் திருமதி அ.அபிநயா, மாநகராட்சி துணை மேயர் திருமதி மா.சாரதா தேவி, தொழிலாளர் இணை ஆணையர் திருமதி புனிதவதி, தொழிலாளர் உதவி ஆணையர் (பொ) எல்.நந்தன், அஸ்தம்பட்டி மண்டலக்குழுத் தலைவர் திருமதி உமா ராணி உட்பட தொழிலாளர் நலத்துறை அலுவலர்கள், தொழிற்சங்க பிரதிநிதிகள் மற்றும் தொழிலாளர்கள் கலந்து கொண்டனர்.

திருவள்ளூர் மேற்கு மாவட்டம் திருவாலங்காடு கிழக்கு ஒன்றிய திமுக சார்பில் நான்காம் ஆண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டம் ஒன்றிய கழகச் செயலாளர் எஸ்.மகாலிங்கம், தலைமையில் நடைபெற்றது இதில் சிறுபான்மை ஆணையத் துணைத் தலைவர் இறையன்பன் குத்தூஸ், மாவட்ட செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன், எம்.எல்.ஏ. வி.ஜி. ராஜேந்திரன் எம்.எல்.ஏ, ஆகியோர் கலந்து கொண்டு சாணை பிடிக்க இயந்திரம் இஸ்திரி பெட்டி வெல்டிங் இயந்திரம் மற்றும் பல்வேறு உதவிகளை வழங்கினார்கள் உடன் கே.திராவிடபக்தன், ஆர்.டி.இ. ஆதிகேஷன், சி.ஜெயபாரதி, மோ.ரமேஷ், ப.சிட்டிபாபு, களம்பாக்கம் எம்.பன்னீர்செல்வம், சுஜாதா மகாலிங்கம், ஜி.ரமேஷ், எஸ்.சண்முகம், நீலாவதிசீனிவாசன், ஜீவ.ஞானபிரகாஷ், நூருல்லா, தினகரன், ஏ.பி. செந்தில்குமார், வி.ஜெகதீசன், ஆர்.ராஜா, கே.குமார், செல்வம், அரிபாபு, ஆறுமுகம், சீனிவாசன், அரிதாஸ், மணிவண்ணன், நந்தகுமார், ஜெய்சங்கர், உள்பட பலர் பங்கேற்றனர்.